# PRIMARY 6 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)
# தொடக்கநிலை 6 உயர்தமிழ்ப் பயிற்சித்தாள் (தாள் 2)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்பொருள் (தேர்வுத்தாள் 1 - 12) | 121 - 130 |
| 14 | விடைத்தாள்கள் | 131 - 162 |


WORDSMITH BEYOND LEARNING

# தேர்வுத்தாள் 1

| | |
|---|---|
| | 60 |

**'அ' பிரிவு**

**A1 பிழைத்திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

ஒரு செயலை நாம் கால தாமதத்துடன் செய்தால் அது மற்றவர்களுக்கு நம் மீது ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்தாது. அது நமக்கே சில வேளைகளில் பாதிப்பாக அமைந்துவிடுவதும் உண்டு. முத்துராமன் என்னும் சிறுவன் தொடக்கப்பள்ளி ஆறாம் Q1. நிலையின் படிக்கும் மாணவன். அவன் எதைச் செய்தாலும் கால தாமதத்துடன்தான் செய்வான். ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப்பாடங்களை உடனுக்குடன் செய்யாமல் காலம் தாழ்த்திச் செய்வான். பள்ளிக்கும் Q2. எத்தனை முறை கால தாமதமாக வந்து அதற்கான தண்டனையையும் பெற்றுள்ளான். இருந்தாலும் முத்துராமனால் அந்தக் கெட்ட பழக்கத்தை மாற்ற முடியவில்லை. அவன் மாற்றிக்கொள்ள எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

அன்று தொடக்கப்பள்ளி ஆறாம் நிலையின் இறுதியாண்டுத் தேர்வு. அந்நிலையில் பயிலும் மாணவர்களுக்கு அது மிகவும் முக்கியமான தேர்வாகும். தேர்வு இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவிருந்தது. Q3. அதனால், முத்துராமன் இன்னும் பள்ளிக்கு வரவில்லை. வழக்கம்போல் அவன் கால தாமதமாகவே வந்தான். அவன் பள்ளி மண்டபத்திற்குள் நுழையும்போது தேர்வு தொடங்கி அரைமணி நேரத்திற்குமேல் ஆகிவிட்டது. நேரம் Q4. பற்றாக்குறையாள் முத்துராமனால் தேர்வை முழுமையாகச் செய்து முடிக்க இயலவில்லை. விளைவு? அவன் தேர்வில் தோல்வியடைந்தான். Q5. தம் கெட்ட பழக்கத்தினால் தன் எதிர்காலமே பாதிக்கப்பட்டதை உணர்ந்த முத்துராமன் தன்னை மாற்றிக்கொள்ள முடிவெடுத்தான்.

| வினா | விடை |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

**A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்து எழுதவும். அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.**

Q6 நாம் போதிய அளவு தண்ணீர் குடிக்காவிட்டால் நமக்குப் பல நோய்கள் வரும்.

நமக்குப் பல நோய்கள் வரக் காரணம் ______________________________________

______________________________________________________________________________

Q7 கடின உழைப்பும் விடாமுயற்சியுமே ஒருவருக்கு வெற்றியைத் தேடித்தரும்.

கடின உழைப்பும் விடாமுயற்சியும் இன்றி ______________________________________

______________________________________________________________________________

Q8 நான்கு இன மக்கள் இங்கே ஒற்றுமையாக வாழ்வது நமது நாட்டின் சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது.

நமது நாட்டின் சிறப்பம்சமாகக் கருதப்படுவது ______________________________________

______________________________________________________________________________

Q9 பள்ளிகளில் ஆரோக்கியமான உணவு வகைகள் மட்டுமே விற்கப்படுகின்றன.

பள்ளிகளில் ஆரோக்கியமான உணவு வகைகளை ______________________________

______________________________________________________________________________

Q10 கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டால் கவலை இல்லாமல் வாழலாம்.

கவலை இல்லாமல் வாழ கற்றுக் கொள்ள வேண்டியது ______________________

______________________________________________________________________________

WORDSMITH BEYOND LEARNING

## ‘ஆ’ பிரிவு

**B3 கருத்தறிதல் 1 (16 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படித்து அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

1. நாட்டரசன்புரம் என்ற நாட்டை மார்த்தாண்டன் என்ற மன்னன் ஆண்டார். அவர் தனது நாட்டில் பல சிரமங்களுக்கிடையில் மிகப்பெரிய பூந்தோட்டம் ஒன்றை அமைத்தார். அதில் பலவகையான பூச்செடிகளை வளர்த்தார். பல நிறத்தில் பூமரங்களையும் அமைத்தார். பூமரங்களை ஒட்டி நல்ல காய், கனிகளைத் தரும் மரங்களையும் அமைத்தார். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேல் என்ற புற்களையும், புல்லின் நடுவே தரையில் படரும் சிறிய பூச்செடி வகையையும் வளர்த்தார்.

2. மரங்களிலும் புதர்களிலும் பறவைகள், முயல்கள், அணில்கள் போன்றவற்றையும் வளர்த்தார். வைரத்தை தங்கத்தில் பதித்தது போல பொன்னிற புள்ளி மான்கள் அந்தத் தோட்டத்தில் அங்குமிங்கும் துள்ளியோடின. அந்தத் தோட்டத்தைக் கண்டால் மனம் அமைதியடையும். கவலைகள் மறந்து போகும். அந்தத் தோட்டத்தைக் காணவும், ரசிக்கவும் பல தேசத்து ராஜாக்களும் சிற்றரசர்களும் வருவர். அவர்களை மன்னர் வரவேற்று உபசரிப்பார். அவர்கள் தோட்டத்தைச் சென்று காண்பர்; <u>பிரமிப்பர்</u>. இத்தனை பெரிய இடத்தை வளைத்து, இத்தனை எழிலான ஒரு தோட்டத்தை அமைக்க முடியுமா? என்று வியப்பர். எனினும், அந்தத் தோட்டத்தைச் சுற்றி பார்த்துக் கொண்டே வரும்போது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் முகம் சுளிப்பார்கள்.

3. ஏனென்றால், அந்த இடத்தில் காய்ந்த ஓலைகளுடன் கூடிய ஒரு சிறு குடிசை இருந்தது. அந்தக் குடிசையின் சுற்றுச்சுவர்கள் வெறும் களிமண்ணால் பிசைந்து கட்டப்பட்டிருக்கும். அந்த ஓலைக் குடிசையைச் சுற்றி துவைக்கும் கல்லும், முக்கூட்டுக் கற்களால் அடுக்கப்பட்ட ஒரு சிறு அடுப்பும், ஏழெட்டு நைந்து போன துணிமணிகளும், அலுமினியக் குவளைகளும் கிடக்கும். குடிசையைச் சுற்றி நாகவல்லி செடி நிறைந்து இருக்கும். இத்தனை அற்புதமான ஒரு தோட்டத்தின் நடுவே இத்தனை **<u>கோரமான</u>** பஞ்சக்குடிசை ஒன்று ஏன் உள்ளது என்று யாருக்குமே புரியவில்லை.

4. எனினும், அந்தக் காரணத்தை மன்னனிடம் கேட்கும் தைரியம் யாருக்கும் வரவில்லை. நாட்கள் சென்றன. மகிபாலன் என்றொரு சிற்றரசன் அந்தத் தோட்டத்தைக் காண வந்தான். மன்னருடன் சேர்ந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தபடி அரசனைப் பலவிதமாகப் புகழ்ந்தபடி வந்தான். திடீரென அவன் கண்கள் குடிசையைக் கண்டன. உடனே முகம் **<u>வாடினான்</u>**. அத்தனை எழில்மிக்க தோட்டத்தில் இப்படி ஓர்

ஏழ்மைத் தோற்றத்துடன் கூடிய குடிசை ஒன்று இருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

5. உடனே அரசரிடம், “மன்னா இந்த எழிலான தோட்டத்தில் இப்படியொரு எளிய குடிசை இருப்பதன் காரணம் என்ன?" என்று கேட்டான். உடனே மன்னன், “மகிபாலா! இந்தக் குடிசை உன்னைப் போன்ற ஒரு தைரியசாலியின் குடிசை. நான் எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தோட்டத்தை உருவாக்க முயன்றபோது ஒரு பெரிய **<u>பரப்பளவுடன்</u>** கூடிய இடம் எனக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டது. நாடு முழுக்க அமைச்சர் அந்த மாதிரி ஓர் இடத்தைத் தேடிய போது இந்த இடம் அகப்பட்டது. ஆனால், பெரிய இடத்திற்கு நடுவே இந்தக் குடிசையும் இருந்தது. இதில் இருந்த ஏழைக் கிழவி, “நீ இந்தக் குடிசையைக் காலி செய்ய வேண்டும். இங்கு மன்னர் மிகப் பெரிய பூந்தோட்டம் அமைக்க இருக்கிறார்," என்று கூறியபோது கிழவி மறுத்திருக்கிறாள்.

6. விபரமறிந்த நான் நேரில் வந்து, “இடத்தை காலி செய்," என்று கூறினேன். ஆனால் அந்த கிழவியிடம், “மன்னா! இது என் பாட்டன் பூட்டன் காலத்துக் குடிசை. இதைத் தாங்கள் அழிப்பதை நான் விரும்பவில்லை. என் உயிரே போனாலும் இதனை இடிக்கவோ, ஓலைகளைப் பிரித்தெறியவோ நான் மனதார ஒப்புக்கொள்ள மாட்டேன். படைபலம் நிறைந்த நீங்கள் நினைத்தால் என்னை ஒரே நிமிடத்தில் கொன்றுவிடலாம். நான் இறந்த பின்பு இந்த இடத்தை நீங்கள் இடித்து, சிதைத்து உமது தோட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம்," என்றாள்.

7. “ஆனால், நான் இறந்தாலும் எனது பூர்வீகக் குடிசையை அழித்து என் மனதில் வேதனையை ஏற்படுத்தியதற்காக தங்களுக்கு இறைவன் நிச்சயம் தண்டனையைத் தந்தே தீருவார்," என்று கூறி அழுதார். “அவள் கண்ணீரில் இருந்த நியாயமும் பூர்வீக நினைவுச் சின்னத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் மனோ தைரியத்தால் என்னை எதிர்த்து அவள் பேசிய வீரமும் என் மனதை நெகிழ வைத்தது. அவள் மன உணர்வை மதித்து, நான் இந்தக் குடிசையை அகற்றாமல் வைத்திருக்கின்றேன். இந்தத் தோட்டம் உருவாக்கிய நான்கு, ஐந்து ஆண்டுகளில் அந்தக் கிழவி இறந்துவிட்டாள். அவளுக்குப் பின் இந்தக் குடிசையை கவனித்துக் கொள்ள யாரும் இல்லை என்றாலும் அந்தக் கிழவியின் உணர்வுக்கும், வீரத்திற்கும் மதிப்பு தர எண்ணி இந்தக் குடிசையை **<u>அகற்ற</u>**வில்லை," என்றார். மற்றவர்களின் மன உணர்வுகளை மதிக்கும் குணம், யாரையும் மன உளைச்சலுக்கு ஆளாக்காமல் இருப்பது ஆகிய மன்னனின் நல்ல பண்புகளை மகிபாலன் வியந்து பாராட்டினான்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

Q11 முதல் பத்தியின் வழி கதாசிரியர் வாசகர்களுக்கு உணர்த்த விரும்பும் முக்கியக் கருத்து யாது? பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குப் புட்குறி (✓) இடவும். உன் விடைக்கான காரணங்களைக் கதையின் துணைக்கொண்டு எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| மற்றவர்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். | |
| நம் சுயநலத்திற்காக மற்றவர்களை வேதனைப்படுத்தலாம். | |
| சுயநலமாக இருப்பது அவசியம். | |

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

Q12 - Q13 கதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியா, தவறா என்று எழுதவும். பின்னர், உன் விடைக்கான காரணத்தை எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | **வாக்கியம்** | **சரி / தவறு** | **காரணம்** |
|---|---|---|---|
| Q12 | அந்தத் தோட்டத்தைக் கண்டால் மனது நிம்மதி அடையும். | | |
| Q13 | தோட்டத்தின் நடுவே இருந்த குடிசை மிகவும் அழகாக காட்சியளித்தது. | | |

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP STAGES + achieve BIG

Q14 பின்வரும் தலைப்புகளில் எந்தத் தலைப்பு இக்கதைக்கு மிகப் பொருத்தமாக இருக்கும்? அதற்குப் புட்குறி (✓) இடவும். உன் விடைக்கான **காரணங்களை** எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | | | |
|---|---|---|---|
| கிழவியின் பூர்வீகக் குடிசை | | தைரியமான மகிபாலன் | |

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

Q15 மூன்றாம் பத்தியில், 'கிழிந்து' என்பதை குறிப்பிட எந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது? அதைக் கண்டறிந்து எழுதவும். (2 மதிப்பெண்கள்)

Q16 ஏழாம் பத்தியில், 'பரம்பரை' என்னும் பொருளை உணர்த்தும் சொல் இடம்பெற்றுள்ளது. அதைக் கண்டறிந்து எழுதவும். (2 மதிப்பெண்கள்)

**C4 சுயவிடைக் கருத்தறிதல் (24 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியிற் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவிற்குச் **சுதந்திரம்** பெற்றுத் தரப் போராடியவர். 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் இந்தியாவின் மிக முக்கியமான வழக்குரைஞர்களில் ஒருவர். தமிழ்நாட்டில் வலிமையான தொழிற்சங்கங்கள் ***இயங்க*** தலைமைப் பொறுப்பு **வகித்தவர்**. முதல் உள்நாட்டுக் கப்பல் சேவையை அமைத்த மாமனிதர். புரட்சி, தைரியம், விடாமுயற்சி ஆகிய குணங்களைத் தன் செயல்களின் மூலம் வெளிப்படுத்தியவர். இந்தச் சிறப்புகளுக்குரியவர்தான் 'கப்பலோட்டிய தமிழன்' என்று உலகத் தமிழ் மக்களால் போற்றப்படும் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

சிதம்பரம் பிள்ளை 1872ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் இந்தப் **புவியில்** தோன்றினார். இவரின் சொந்த ஊர் இந்தியாவிலிருக்கும் ஒட்டப்பிடாரம் என்பதாகும். சிதம்பரம் பிள்ளையின் தந்தை அந்நாட்டின் **பிரபலமான** ஒரு வழக்குரைஞர். தன் ***தந்தையின் வழியிலேயே தானும் செல்ல வேண்டும்*** என்ற குறிக்கோளுடன் சிதம்பரம் பிள்ளை அல்லும் பகலும் படித்தார். அவருக்குச் சட்டக் கல்லூரியில் இடம் கிடைத்தபோது தன் கனவில் பாதி நிறைவேறிவிட்டதாக எண்ணி அகமகிழ்ந்தார். சட்டக் கல்லூரியில் வழக்குத் தொடர்பாகப் பல ஆய்வுகள் நடத்தி, அவற்றில் வெற்றிக் கண்டு தன் தந்தையைப் போலவே சிதம்பரம் பிள்ளையும் ஒரு வழக்குரைஞரானார். அவரின் தந்தை செல்வந்தர்களுக்காக அதிகம் **வாதிட்ட போதிலும்**, சிதம்பரம் பிள்ளை ஏழை மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் அதிக நாட்டம் கொண்டிருந்தார்.

சிதம்பரம் பிள்ளை வாழ்ந்த காலகட்டத்தில் இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் தங்களின் வியாபார முறைகளைத் தமிழர்களிடம் ***திணிக்க***ப் பார்த்தனர். தமிழர்கள் ஆங்கிலேயர்களின் வியாபார முறையைப் பின்பற்றத் தொடங்கிவிட்டால் இந்தியப் பாரம்பரியக் கைத்தொழில்கள் **தடமே** இல்லாமல் மறைந்துவிடும். இந்தியச் சமூகத்தினருக்கும் ஓர் அடையாளம் இல்லாமல் போய்விடும். இதை உணர்ந்த சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் மற்றும் சில சுதந்திரப் போராட்ட வீரர்களுடன் இணைந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடினார்.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக சிதம்பரம் பிள்ளை இலங்கையிலிருந்த ஆங்கிலேயக் கப்பல் போக்குவரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். அவர் தனது நண்பர்களின் துணையுடன் இரண்டு **நீராவிக்கப்பல்**களை வாங்கினார். ஆங்கிலேயர்களின் கடுங்கோபத்தையும் **பொருட்படுத்தாமல்** இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் வியாபாரத்தை மீண்டும் தொடர்ந்தார்.

அவரின் கப்பல் போக்குவரத்து நிறுவனம் ஒரு **வர்த்தக** மையமாக மட்டுமல்லாமல் இந்தியாவில் ஓர் இந்தியரால் அமைக்கப்பட்ட முதல் விரிவான கப்பல் போக்குவரத்துச் சேவையாகவும் மக்களுக்குப் பணியாற்றியது. இது அப்போது அங்கு செயல்பட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேயரின் கப்பல் நிறுவனத்திற்குக் கடும் போட்டியாக விளங்கியது. ஆயினும், சிதம்பரம் பிள்ளையின் கப்பல் நிறுவனத்தை எதிர்த்து ஆங்கிலக் கப்பல் நிறுவனத்தால் போட்டிப் போட முடியாமல் நொடித்துப்போனது. சிதம்பரம் பிள்ளையின் இந்த அருஞ்செயல் அவருக்குக் 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் சிறப்பினைப் பெற்றுத் தந்தது.

சிதம்பரம் பிள்ளை இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பல **இன்னல்**களைச் சந்தித்த போதிலும், அவர் மனம் தளராது விடாமுயற்சியுடன் போராடினார். அவரின் பணி என்றுமே போற்றத்தக்கது.

Q17 'கப்பலோட்டிய தமிழன்' எனும் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் சிறப்புகள் யாவை? (4 மதிப்பெண்கள்)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

Q18 ***தந்தையின் வழியிலேயே தானும் செல்ல வேண்டும்*** என்ற தொடரின் மூலம் சிதம்பரம் பிள்ளையைப் பற்றி நாம் அறிந்துகொள்வது என்ன? (4 மதிப்பெண்கள்)

Q19 சிதம்பரம் பிள்ளையும் அவரின் தந்தையும் தங்களது வழக்குரைஞர் தொழிலில் எவ்வாறு வேறுபட்டிருந்தனர்? (3 மதிப்பெண்கள்)

Q20 வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதந்திரப் போராட்ட வீரர்களுடன் இணைந்து ஆங்கிலேயர்களை எதிர்க்கக் காரணம் என்ன? (4 மதிப்பெண்கள்)

Q21 எது ஆங்கிலேயர்களுக்குக் கடுங்கோபத்தை உண்டாக்கியது? (3 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

Q22 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் சிறப்பு சிதம்பரம் பிள்ளைக்கு எவ்வாறு பொருந்தும்? (4 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

Q23 பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வகையில் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. இயங்க - ____________________ (2 மதிப்பெண்கள்)

ஆ. திணிக்க - ____________________ (2 மதிப்பெண்கள்)

**PRIMARY 6 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)**
**தொடக்கநிலை 6 உயர்தமிழ் பயிற்சித்தாள் (தாள் 2)**

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | அபிப்ராயத்தை | எண்ணத்தை | Opinion |
| 2. | பயிலும் | படிக்கும் | Studying |
| 3. | பிரமிப்பர் | வியப்பர் | Admiring |
| 4. | கோரமான | பயங்கரமான | Horrible |
| 5. | வாடினான் | சோகமானான் | Sad |
| 6. | பரப்பளவுடன் | இடத்தின் அளவு | Area |
| 7. | அகற்ற | நீக்க | Removed |
| 8. | சுதந்திரம் | விடுதலை | Independence |
| 9. | வகித்தவர் | ஏற்றவர் | In charge |
| 10. | புவியில் | உலகில் | On the earth |
| 11. | பிரபலமான | புகழ்பெற்ற | Famous |
| 12. | வாதிட்ட போதிலும் | சொல்லாடிய போதிலும் | Although argued |
| 13. | தடமே | அடையாளமே | Trace |
| 14. | நீராவிக்கப்பல் | நீராவியின் மூலம் செயல்படும் கப்பல் | Steam ship |
| 15. | பொருட்படுத்தாமல் | முக்கியத்துவம் கொடுக்காமல் | Ignoring |
| 16. | வர்த்தக | வியாபார | Business |
| 17. | இன்னல் | துன்பம் | Trouble |

| தேர்வுத்தாள் 12 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | நடப்பு | நிகழ்வு | Current issu |
| 2. | மேம்படுத்த | உயர்த்த | Develop |
| 3. | ஊக்குவிக்க | உற்சாகமூட்ட | Encourage |
| 4. | அதிநவீன | மிகவும் புதுமையான | Extemely modern |
| 5. | சாகசம் | வீரமிக்க | Adventurous |
| 6. | வீரமங்கையர் | வீரமிக்க பெண்கள் | Courageous women |
| 7. | பெருமிதம் | பெருமை | Proud |
| 8. | அங்கத்தை | பாகத்தை | Part |
| 9. | தமையனை | சகோதரனை | Brother |
| 10. | நீராட்டி | குளிப்பாட்டி | Bath |
| 11. | பாலகன் | சிறுவன் | Boy |
| 12. | பேடி | கோழை | Coward |
| 13. | களிறின் | யானையின் | Elephant |
| 14. | வாரியாக | வகையாக | Based on |
| 15. | இயல்பின | குணத்தை உடையன | Characterised |
| 16. | ஆதிக்கத்தால் | செல்வாக்கினால் | Dominance |
| 17. | அயல்நாடு | வெளிநாடு | Foreign country |
| 18. | புலனம் | - | Whatsapp |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS JUMP GRADES ACHIEVE BIG

**PRIMARY 6 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)**
**தொடக்கநிலை 6 உயர்தமிழ்ப் பயிற்சித்தாள் (தாள் 2)**

## விடைத்தாள்

## தேர்வுத்தாள் 1

Q1 நிலையில்
Q2 எத்தனையோ
Q3 ஆனால்
Q4 பற்றாக்குறையால்
Q5 தன்
Q6 நாம் போதிய அளவு தண்ணீர் குடிக்காததே ஆகும்.
Q7 ஒருவர் வெற்றியடைய முடியாது.
Q8 இங்கு நான்கு இன மக்கள் ஒற்றுமையாக வாழ்வதே ஆகும்.
Q9 மட்டுமே விற்கிறார்கள்.
Q10 கைத்தொழில்.

Q11

| | |
|---|---|
| மற்றவர்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். | √ |

பூந்தோட்டம் அமைக்க மிகப் பெரிய இடம் மன்னனுக்குத் தேவைப்பட்டது. அவ்வாறு தேடும்போது பெரிய இடத்திற்கு நடுவே ஒரு குடிசை தென்பட்டது. அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு அக்கிழவியிடம் கூறும்போது, அக்கிழவி மறுத்துவிட்டாள். அது தனது பூர்வீகக் குடிசை என்பதாலும் அதனை அழிப்பதை விரும்பவில்லை என்றும் அக்கிழவி கூறியுள்ளாள். கண்ணீர் விட்டு பேசியதைக் கேட்ட மன்னனுக்கு அக்குடிசையை அழிக்க மனம் வரவில்லை. கிழவியின் மன உணர்வை மதிக்கும் விதமாக அக்குடிசையை நிரந்தரமாகப் பாதுகாத்து வந்துள்ளார் மன்னன்.

Q12-13

| | **வாக்கியம்** | **சரி / தவறு** | **காரணம்** |
|---|---|---|---|
| Q12 | அந்தத் தோட்டத்தைக் கண்டால் மனது நிம்மதி அடையும். | **சரி** | அந்தத் தோட்டத்தில் பலவகையான பூச்செடிகள், பூமரங்கள், எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேல் என்ற புற்கள், புல்லின் நடுவே தரையில் படரும் சிறிய பூச்செடி ஆகிய செடி வகைகள் இருந்தன. மரங்களிலும் புதர்களிலும் பறவைகள், முயல்கள், அணில்கள் போன்றவை வளர்க்கப்பட்டன. பொன்னிறப் புள்ளி மான்களும் தோட்டத்தில் இருந்தன. அந்தத் தோட்டத்தைக் கண்டால் மனம் அமைதியடையும். கவலைகள் மறந்து போகும். |
| Q13 | தோட்டத்தின் நடுவே இருந்த குடிசை மிகவும் அழகாக காட்சியளித்தது. | **தவறு** | குடிசை காய்ந்த ஓலைகளுடன் வெறும் களிமண்ணால் பிசைந்து கட்டப்பட்டிருந்தது. அந்த ஓலைக் குடிசையைச் சுற்றி துவைக்கும் கல்லும் முக்கூட்டுக் கற்களால் அடுக்கப்பட்ட ஒரு சிறு அடுப்பும் ஏழெட்டு நைந்து போன துணிமணிகளும், அலுமினியக் குவளைகளும் இருந்தன. குடிசையைச் சுற்றி நாகவல்லி செடி இருந்தது. |

Q14

| | |
|---|---|
| கிழவியின் பூர்வீகக் குடிசை | √ |

மன்னன் பெரிய இடத்தில் பூந்தோட்டம் அமைக்க வேண்டி ஓர் இடத்தைத் தேடும் போது, குடிசையுடன் சேர்ந்த இடம் கிடைத்தது. அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு கிழவியிடம் கூறியபோது அவள் மறுத்தாள். தன் பூர்வீகக் குடிசையை விட்டுப் போவதையும் அதனை அழிப்பதையும் கிழவி விரும்பவில்லை. தைரியமாக மன்னனிடம் தன் குடிசையை அழித்தால், கண்டிப்பாக கடவுள் தண்டனை தருவார்

என்று கண்ணீருடன் கூறினாள். அவளின் வேண்டுகோளில் நியாயம் இருப்பதாக எண்ணிய மன்னன் அக்குடிசையை அப்படியே விட்டு விட்டார். கிழவி இறந்த பிறகும் அக்குடிசை அழிக்கப்படாமல், அவளின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் வகையில் பாதுகாக்கப்படுகின்றது.

Q15 நைந்து

Q16 பூர்வீகம்

Q17 வ.உ.சிதம்பரம் பிள்ளை இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தரப் போராடியவர். அவர் பிரிட்டிஷ் இந்தியாவின் மிக முக்கியமான வழக்குரைஞர்களில் ஒருவர். மேலும், அவர் தமிழ்நாட்டில் இருந்த வலிமையான தொழிற்சங்கங்கள் இயங்க தலைமை பொறுப்பு வகித்தவர். முதல் உள்நாட்டுக் கப்பல் சேவையை அமைத்தவர். அதோடு மட்டுமல்லாமல் புரட்சி, தைரியம், விடாமுயற்சி ஆகிய பண்புகளைத் தனது செயல்களின் மூலம் வெளிப்படுத்தியவர். இவையே 'கப்பலோட்டிய தமிழன்' எனும் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் சிறப்புகளாகும்.

Q18 தந்தையின் வழியிலேயே தானும் செல்ல வேண்டும் என்ற தொடரின் மூலம், சிதம்பரம் பிள்ளை தன் தந்தையைப் போலவே தானும் படித்து ஒரு வழக்குரைஞராக விரும்புகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

Q19 சிதம்பரம் பிள்ளையின் தந்தை பெரும்பாலும் செல்வந்தர்களுக்காகவே வழக்காடுவார். ஆனால், சிதம்பரம் பிள்ளையோ ஏழைகளுக்காக வழக்காடி அவர்களுக்கு நீதி வாங்கித் தருவதில் ஆர்வம் கொண்டிருந்தார். இவ்வாறே சிதம்பரம் பிள்ளையும் அவரின் தந்தையும் வழக்குரைஞர் தொழிலில் வேறுபட்டிருந்தனர்.

Q20 ஆங்கிலேயர்கள் தங்களின் வியாபார முறைகளைப் பின்பற்றி தமிழர்களைக் கட்டாயப்படுத்தினார்கள். அவர்களின் வியாபார முறையைப் பின்பற்றினால் இந்தியப் பாரம்பரியக் கைத்தொழில்களும் இந்தியச் சமூகமும் அடியோடு மறைந்துபோய்விடும். இதன் காரணமாக சிதம்பரம் பிள்ளை சுதந்திரப் போராட்ட வீரர்களுடன் இணைந்து ஆங்கிலேயர்களை எதிர்த்தார்.

Q21 ஆங்கிலக் கப்பல் போக்குவரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர சிதம்பரம் பிள்ளை இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கி தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இருக்கும் வியாபாரத்தைத் தொடர்ந்தார். இதுவே ஆங்கிலேயர்களுக்குக் கடுங்கோபத்தை உண்டாக்கியது.

Q22 சிதம்பரம் பிள்ளையின் கப்பல் நிறுவனம் ஒரு வர்த்தக மையமாக மட்டுமல்லாமல், இந்தியாவில் ஓர் இந்தியரால் அமைக்கப்பட்ட முதல் விரிவான கப்பல் போக்குவரத்துச் சேவையாக விளங்கியது. மேலும் அது ஆங்கிலேயர்கள் போட்டிப் போட முடியாத அளவிற்கு விரிவான கப்பல் போக்குவரத்துச் சேவையாக மக்களுக்குச் சேவையாற்றியது. இந்த அருஞ்செயல்களைச் செயல்படுத்தியதால் சிதம்பரம் பிள்ளைக்குக் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற சிறப்பு பொருந்தும்.